Find us on facebook/tamilmirror · Follow us on tamilmirror · epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 20, 2023

புதன்கிழமை செப்டெம்பர் 20, 2023 | ஒளி: 09 கதிர்: 088 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE

ஈஸ்டர் ஞாயிறு சாட்சிய

# விசாரணைகளை ஏன் மறைக்க வேண்டும்?



**கோட்டாவின் காலத்தில் முன்வைத்த அறிவித்தலை இப்போதும் பேணுவது ஏன்?**

**ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை விற்றே அரசாங்கத்தை அமைத்தனர். சபாநாயகரும் அதன்மூலமே வந்தார்.**

ஈஸ்டர் ஞாயிறு தாக்குல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கையை, அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாசிப்பதற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஏன் இன்னும் சாட்சி விசாரணைகளை மக்கள் பிரதிநிதிகளிடம் மறைக்க வேண்டும் என்றும் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன்வைத்து உரையாற்றும் போது, கோரிக்கையை விடுத்திருந்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், “இங்கே எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. பாராளுமன்ற நூலகத்தில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை உள்ளது. அதன் முதல் தொகுதியின் பிரதிகளை வாசிப்பதற்காக பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், இரண்டாவது தொகுதியின் இரண்டு மூன்றாம் பகுதிகளை வாசிக்க வேண்டுமாயின் நூலகத்திற்கு வந்து ஆய்வு செய்ய முடியும் என்று, கோட்டாபய காலத்தில் முன்வைக்கப்பட்ட அறிவித்தல் இப்போதும் கூறப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## உலக வங்கி ஆதரவு; அழைப்பும் ஏற்பு

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா ஏற்றுக்கொண்டார்.

ஜனாதிபதி ஆரம்பித்துள்ள இந்தச் செயற்றிட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றால் இலங்கை எதிர்பார்க்கும் இலக்குகளை விரைவாக அடைய முடியுமென நம்பிக்கை தெரிவித்துள்ள உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா, அந்த முயற்சிகளுக்கு உலக வங்கியின் முழுமையான ஒத்துழைப்பு கிட்டும் என்றும் உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2



## எங்களை சுட்டுக் கொன்றாலும் கண்டுபிடிக்க முடியாத நிலை

**திறமையான புலனாய்வாளர்களை தர முடியும் என்கிறார் சார்ல்ஸ்**



பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து சபாநாயகர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்காலத்தில் எங்கள் மீதும் துப்பாக்கி சூட்டை நடத்தி, நாங்கள் இறந்தால் அதனை கண்டுபிடிக்க முடியாத நிலைமையே உள்ளது என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## திலீபனை நினைவேந்த கொழும்பில் தடை

கொழும்பு கோட்டை, கொம்பனித்தெரு, கொள்ளுப்பிட்டி, மருதானை பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த இரண்டு நீதவான் நீதிமன்றங்கள் தடை உத்தரவு பிறப்பித்துள்ளன.

கொழும்பு கோட்டை, கொம்பனித்தெரு, கொள்ளுப்பிட்டி பகுதிகளில் நினைவேந்தல் நடத்த கோட்டை நீதவான் நீதிமன்றம், செவ்வாயக்கிழமை (19) தடை உத்தரவு பிறப்பித்தது.

குறித்த பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளைக் கருத்திற்கொண்டு, செவ்வாய்க்கிழமை (19) நண்பகல் 12 மணி முதல் இரவு 10 மணி வரை கோட்டை நீதவான் நீதிமன்றம் தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

தொடர்ச்சி P2

கொழும்பு துறைமுக நகருக்கு மாத்திரம்

## விசேட வரி சலுகை வழங்கியமை பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும்

துறைமுக நகரத்துக்கு முன்பாக உள்ள சங்ரில்லா ஹோட்டல் உட்பட வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஹோட்டல்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் விசேட வரி சலுகை வழங்கப்பட்டுள்ளமை எதிர்காலத்தில் வணிக நகரம் என்ற இலக்குக்கு பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஏம்.பியான ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) இடம்பெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,



தொடர்ச்சி P2

## ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டை கோப் குழுவில் விசாரணை செய்யவும்

அரசாங்கம் நாட்டை இல்லாதொழித்துள்ளதை போன்று கிரிக்கெட் விளையாட்டையும் சீரழித்துள்ளது என்றும் ஸ்ரீ லங்கா கிரிக்கெட் சபையை கோப் குழுவுக்கு அழைத்து விசாரணை செய்யுங்கள் என்றும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்ததுடன், மேலும் தெரிவிக்கையில்,

கிரிக்கெட் விளையாட்டின் தற்போதை வீழ்ச்சி நிலையை சுட்டிக்காட்டி அண்மையில் பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்தினோம்.

தொடர்ச்சி P2

## பதில் நேர விவகாரத்தால் சபையில் கடும் கூச்சல்

எம்.பி.க்களின் வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு அமைச்சர்களின் பதிலளிக்கும் நேரம் குறித்து சபையில், செவ்வாய்க்கிழமை (19) கூச்சல்கள் எழுந்தன.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (19) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுந்து,

தொடர்ச்சி P2



போராட்டம், பிரச்சினைகள் குறித்து

## அதிகாரிகளுக்கு அக்கறையில்லை

**மாதவணை, மயிலத்தமடு பண்ணையாளர்கள் தெரிவிப்பு**

வா. கிருஸ்ணா

கடந்த ஐந்து தினங்களாக போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில், வாழ்வாதாரத்தை இழந்து தாம் முன்னெடுக்கும் போராட்டம் தொடர்பிலும் தமது பிரச்சினைகள் தொடர்பிலும்



தொடர்ச்சி P2

க.பொ.த உயர்தரப் பரீட்சை:

## ஆணையாளர் விரைவில் அறிவித்தல் வெளியிடுவார்



க.பொ.த உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகள் பரீட்சைகள் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அது குறித்து ஆணையாளர் விரைவில் அறிவித்தலொன்றை வெளியிடுவார் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பரீட்சையை ஒத்திவைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகளால் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) கோரிக்கைகள் விடுக்கப்பட்ட நிலையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

விசேட கூற்றை முன்வைத்து முதலில் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹினி விஜேரட்ன, “பரீட்சைகள் கால அட்டவணையில் மறுசீரமைப்பு கொண்டு வர வேண்டும். வடக்கு, கிழக்கு உள்ளிட்ட கஷ்ட பிரதேச சில பாடசாலைகளில்

தொடர்ச்சி P2

கொழும்பு துறைமுக நகரை

## ‘கொழும்பு நிதி நகரம்’ என்று பெயர் மாற்ற ஆலோசனை

கொழும்பு துறைமுக நகரத்தின் பெயரை ‘கொழும்பு நிதி நகரம்’ என்று மாற்றியமைப்பதற்கும் ஆலோசிக்கப்படுவதாகவும் எனினும் இதுவரை இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக பொருளாதார நகரம் எதிர்வரும் 26 ஆம் திகதி டுபாய் மற்றும் அபிதாபி நாட்டு முதலீட்டாளர்களுக்காக உத்தியோக பூர்வமாக அறிமுகப்படுத்தப்படும். இந்த நிகழ்வில் பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரூன் விசேட அதிதியாக கலந்து கொள்வார் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விவகாரம்

## மக்களை தவறாக வழிநடத்த எதிர்க்கட்சிகள் முயல்கின்றன

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை பாராளுமன்ற நூலகத்துக்கு வழங்கியுள்ள போதிலும் எதிர்க்கட்சித் தலைவர் அதனை ஆராயாதமை கவலையளிப்பதாக தெரிவித்த அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க, நாட்டை பாதிக்கும் பாரதூரமான விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் மக்களை தவறாக வழிநடத்த முயல்வதாக குற்றம்சாட்டினார்.

தொடர்ச்சி P2

## நிலைபெறுதகு அபிவிருத்தி மாநாட்டில் ஜனாதிபதி பங்கேற்பு



ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக, நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் திங்கட்கிழமை (18) ஆரம்பமான ‘நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளுக்கான மாநாடு - 2023’ இல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணைந்துகொண்டார்.

தொடர்ச்சி P2

## இந்தியாவுடனும் சீனாவுடனும் இலங்கை கூட்டணி அமைக்காது

**நியூயோர்க்கில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு**



இலங்கை அரசாங்கம் இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ கூட்டணி அமைக்காது என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கையின் நலன்களை முன்னிலைப்படுத்தி நிற்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பாராளுமன்ற உறுப்பினர்

## அவதானமின்றி செயற்படுவது நல்லிணக்கத்தை சீர்குலைக்கும்

**ஆளுநர் செந்தில் தெரிவிப்பு**

தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அதி கவனத்துடன் செயற்பட கூடிய பொறுப்பு உள்ளது. அப்பொறுப்பில் அவதானக் குறைவாக செயற்படுவது நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைப்பதுடன், சட்ட ஒழுங்கும் பாதிப்படைகின்றது என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் குறிப்பிட்டார்.

நாட்டின் நல்லிணக்கத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆளுநர் என்ற வகையில் தனக்கு உள்ளது என்றும் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

திலீபனின் நினைவு ஊர்தி மற்றும் செல்வராசா கஜேந்திரன் மீதான தாக்குதல் குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது;

‘திலீபனின் நினைவேந்தல் ஊர்வலம் பாராளுமன்ற உறுப்பினரால், பொலிஸ் அனுமதி இன்றி, சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசத்தை ஊடுருவி சென்றது. இது இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை இல்லாமல் ஆக்குகிறது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# விசாரணைகளை ஏன் மறைக்க வேண்டும்?

இந்தளவு பேரழிவு நடந்த பின்பு உண்மையை நாட்டில் உள்ளவர்கள் அறிந்துகொள்ள முடியாதுள்ள நேரத்தில், இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவருக்கு இருக்கும் உரிமை என்ன? இரண்டாவது, மூன்றாவது தொகுதியை பாராளுமன்ற பொதுச் செயலாளரின் கண்காணிப்பின் கீழேயே பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கோட்டாவின் காலத்தில் முன்வைத்த அறிவித்தலை இப்போதும் பேணுவது ஏன்?

ஏன் இன்னும் சாட்சி விசாரணைகளை மக்கள் பிரதிநிதிகளிடம் மறைக்க வேண்டும். இதனால் இப்போதாவது ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மை வெளிவர வேண்டும். வியாழன், வெள்ளிக்கிழமை விவாதத்திற்கு முன்னர் குறித்த அறிக்கையின் இரண்டு, மூன்றாம் தொகுதியை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாசிப்பதற்கு வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு செய்யாது இதனை தொடர்ந்தும் மறைத்து வைத்திருக்க நினைத்தால் கைகளில் இரத்தக்கறை படிந்தவர்களே அதனை செய்கின்றனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை விற்றே அரசாங்கத்தை அமைத்தனர். சபாநாயகரும் அதன்மூலமே வந்தார். இதனால் தயவு செய்து குறித்த அறிக்கையின் இரண்டாம் தொகுதியின் இரண்டாம், மூன்றாம் பகுதிகளை எம்.பிக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுங்கள் என்றார்.

# விசேட வரி சலுகை வழங்கியமை பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும்

“ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக உள்ள 50 ஏக்கர் நிலப்பரப்பை சீனாவுக்கு எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் உறுதிப்பத்திரம் ஊடாக வழங்கும் வகையில் தான் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை திருத்திக் கொள்வதற்காகவே துறைமுக அபிவிருத்தி நகர செயற்றிட்டம் குறுகிய காலத்துக்கு இடை நிறுத்தப்பட்டன.

இக்கால கட்டத்தில் கையளிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகர வலயத்தை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 99 வருட கால ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் இலங்கைக்கு உரித்தாக்கினார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டுக்கு கொண்டு வருவதாக கூறப்படுகின்றது. முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் நாட்டுக்கு அழைத்து வந்த முதலீட்டாளர் நிதி சலவை குற்றச்சாட்டுக்கு உள்ளாகி வெளிநாட்டில் சிறை தண்டனைக்கு உள்ளாக்கியுள்ளார்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஒட்டுமொத்த மக்களும் வரி விதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்பு துறைமுக பொருளாதார நகரத்துக்கு வரி சலுகை வழங்கப்பட்டுள்ளது.

துறைமுக நகரத்துக்கு முன்பாக உள்ள சங்ரில்லா ஹோட்டல் உட்பட வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஹோட்டல்களுக்கு சடுதியாக வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் விசேட வரி சலுகை வழங்கப்பட்டுள்ளமை எதிர்காலத்தில் வணிக நகரம் என்ற இலக்குக்கு பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும் நிலை உள்ளது” என்றார்.

## ‘கொழும்பு நிதி நகரம்’ என்று பெயர் மாற்ற ஆலோசனை

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) இடம்பெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கொழும்பு துறைமுக பொருளாதார நகரம் இலங்கையின் பிரதான முதலீட்டு வலயமாக காணப்படுகிறது. இதில் 19 வணிக வலயங்களை முன்னிலைப்படுத்தி முதலீடுகளை மேற்கொள்ள பல்வேறு துறைகளை தொடர்புப்படுத்தி 17 முதலீட்டாளர்கள் முன்னிலையாகியுள்ளார்கள். இதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன” என்றார்.

## நிலைபெறுதகு அபிவிருத்தி மாநாட்டில் ஜனாதிபதி பங்கேற்பு

2030 ஆம் ஆண்டளவில் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை அடைவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய நடவடிக்கைகள் குறித்து இங்கு ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, சர்வதேச புரிந்துணர்வுக்கான வர்த்தக கவுன்ஸில் மற்றும் அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ‘இலங்கையில் பொருளாதார வாய்ப்புகள்’ என்ற தொனிப்பொருளில் திங்கட்கிழமை (18) நடைபெற்ற வர்த்தக வட்டமேசை கலந்துரையாடலிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

இலங்கையில் முதலீடு மற்றும் வர்த்தக வாய்ப்புகள் பற்றி ஆராயும் அமெரிக்காவில் உள்ள 40க்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் இலங்கையில் உள்ள தனியார் துறையின் உயர்மட்ட வர்த்தக பிரதிநிதிகள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்தின் சிரேஷ்ட பிரதிநிதிகளும் இந்த வட்ட மேசை கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## ஆணையாளர் விரைவில் அறிவித்தல் வெளியிடுவார்

உயர்தர வகுப்புகளின் இன்னும் பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. அத்துடன் 2023 ஆம் ஆண்டில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இரண்டரை வருட உயர்தர வகுப்பில் கற்கும் காலமும் கிடைக்கவில்லை.

இரண்டாவது முறையாக பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள், பாடப் பிரிவுகளை மாற்றும் மாணவர்களுக்கு இதனால் அநீதியும் இழைக்கப்படுகின்றது. இங்கு அதிகாரிகளின் தவறுகளே நடந்துள்ளன.

இதனால் நவம்பர் 27ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள பரீட்சையை ஜனவரி 22 முதல் பெப்ரவரி 17 வரையில் நடத்த முடியும். அப்போது பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் பாடசாலை முதலாம் தவணையை ஆரம்பிக்க முடியும். அதேபோன்று மே மாதத்தில் பெறுபேற்றை வழங்கவும் முடியுமாக இருக்கும்.

அவ்வாறு செய்தால் அடுத்த வருடத்தின் பரீட்சையை ஒக்டோபரில் நடத்தவும் முடியுமாக இருக்கும். இதனால் பரீட்சையை ஜனவரி 22ஆம் திகதி வரையில் ஒத்திவைக்க நடவடிக்கை எடுக்கலாம்” என்றார்.

இதன்போது கருத்த தெரிவித்த யாசிறி ஜயசேகர எம்.பி, “இது ஒரு இலட்சம் மாணவர்களுடன் தொடர்புடைய பிரச்சினை. இது தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும். இதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள், பரீட்சைகள் ஆணையாளரை அழைத்து இது குறித்து தீர்மானம் எடுக்க வேண்டும்” என்று தெரிவித்த நிலையிலேயே கல்வி அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தை குறிப்பிட்டார்.

# பதில் நேர விவகாரத்தால் சபையில் கடும் கூச்சல்

“சபாநாயகர் அவர்களே, அமைச்சர்கள் கேள்விகளுக்கு காலை 10.30 மணி வரை மட்டுமே பதில் அளிப்பார்கள் என இன்று காலை தான் (நேற்று) அறிவித்தீர்கள் எனவே நாளை முதல் (இன்று) இதனை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். இதை நான் நியாயம் என்று நினைக்கிறேன்” என்றார்.

இதற்கு “கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஆதரவு தாருங்கள்” என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பதிலளித்தார்.

இதனையடுத்து அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க எழுந்து, “சபாநாயகர் அவர்களே, கடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அந்த முடிவுகள் குறித்து எம்.பிக்களுக்கு தெரிவிக்க வேண்டியது கட்சித் தலைவர்களின் பொறுப்பாகும். அது உங்கள் வேலை இல்லை. 10.30 மணி ஆகும் போது அமைச்சர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று முன்பே கூறியிருந்தோம்” என்றார்.

## இந்தியாவுடனும் சீனாவுடனும் இலங்கை கூட்டணி அமைக்காது

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக நியூயோர்க் நகரில் திங்கட்கிழமை (18) நடைபெற்ற கடல்சார் நாடுகளுக்கான 3 ஆவது இந்து - பசுபிக் தீவு நாடுகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இந்து-பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவிய போதிலும், இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் சமுத்திர தீவு நாடுகளின் சுதந்திரம், அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை மற்றும் அவர்களின் தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## அதிகாரிகளுக்கு அக்கறையில்லை

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் பிரதேச செயலாளர்களும் அக்கறையற்ற நிலையிலேயே உள்ளதாக ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியமாதவணை, மயிலத்தமடு பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

தங்களது மேய்ச்சல் தரைகளை தங்களுக்கு மீட்டுத்தர கோரி செவ்வாய்க்கிழமை (19) ஐந்தாவது நாளாகவும் சூழற்சி முறையிலான போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

சித்தாண்டியில் கால்நடை பண்ணையாளர்கள் செவ்வாய்கிழமை (19) நடத்திய மனித சங்கிலி போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம், மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் சமாசம், மண்முனை தென் மேற்கு கால்நடை கூட்டுறவு சங்கம் உட்பட பல்வேறு அமைப்புகளும், முன்னாள் மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தலைமையிலான மண்முனை வடக்கு தமிழரசுக் கட்சி கிளையும் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

‘அரசே மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்கு’, ‘காணிக் கொள்ளையர்களே மேய்ச்சல் தரையினை விற்றுவிட்டீர்களா?’, ‘அரசே மகாவலி என்னும் போர்வையில் எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே’, ‘மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரே மேய்ச்சல் தரை பிரச்சினை விளங்கவில்லையா’ போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் பல்வேறு கோசங்களையும் எழுப்பினார்கள்.

அரசாங்கத்தில், அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் தமது போராட்டத்திற்கு இதுவரையில் தீர்வைப் பெற்றுக்கொடுக்கமுடியாத நிலையே காணப்படுவதாகவும் இங்கு பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

கால்நடை பண்ணையாளர்கள் மீது பல்வேறு வழியில் முன்னெடுக்கப்படும் அழுத்தங்கள் என்பது, இந்த மாவட்டத்திற்கு மட்டுமன்றி முழு இலங்கைக்குமே பொருளாதார ரீதியான அழுத்தங்களை ஏற்படுத்தும் எனவும் இதன்பேது தெரிவிக்கப்பட்டது.

## அவதானமின்றி செயற்படுவது நல்லிணக்கத்தை சீர்குலைக்கும்

தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அதி கவனத்துடன் செயற்பட கூடிய பொறுப்பு உள்ளது. அப்பொறுப்பில் அவதான குறைவாக செயற்படுவது நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைப்பதுடன், சட்ட ஒழுங்கும் பாதிப்படைகின்றது.

எதிர்காலத்தில் நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் எந்த செயற்பாட்டை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், இது குறித்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவித்தார்.

## ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டை கோப் குழுவில் விசாரணை செய்யவும்

ஸ்ரீ லங்கா கிரிக்கெட் சபை மீது நாங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளை கணக்காளர் நாயகம் தனது இறுதி அறிக்கையில் உள்ளடக்கியுள்ளார். ஸ்ரீ லங்கா கிரிக்கெட் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஏற்றுக்கொண்டதால் அவரை பதவி விலகுமாறு ஆளும் தரப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் அழுத்தம் பிரயோகித்துள்ளார்கள்.

ஸ்ரீ லங்கா கிரிக்கெட் தொடர்பில் நாங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளை விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஏற்றுக்கொண்டார். அத்துடன் கிரிக்கெட் தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்தியதற்கு நன்றி தெரிவித்தார்.

கிரிக்கெட் விளையாட்டை ஒட்டுமொத்த மக்களும் கடுமையாக விமர்சிக்கிறார்கள். அரசாங்கம் நாட்டை இல்லாதொழித்துள்ளதை போன்று கிரிக்கெட் விளையாட்டையும் சீரழித்துள்ளது. ஸ்ரீ லங்கா கிரிக்கெட் சபையை கோப் குழுவுக்கு அழைத்து விசாரணை செய்யுங்கள்” என்றார்.

# உலக வங்கி ஆதரவு; அழைப்பும் ஏற்பு

ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவுக்கும் இடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே உலக வங்கித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேவையான ஆலோசனை சேவைகளுக்காவும் தொழில்நுட்ப உதவிகளுக்கும் அவசியமான நேரங்களில் தம்மை அல்லது சர்வதேச நடவடிக்கைகளுக்கான தலைவரை தொடர்பு கொள்ளுமாறு அறிவித்த உலக வங்கியின் தலைவர், ஒக்டோபர் மாத இறுதியில் சர்வதேச நடவடிக்கைகளுக்கான தலைவர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## எங்களை சுட்டுக் கொன்றாலும் கண்டுபிடிக்க முடியாத நிலை

இலங்கையின் புலனாய்வுப் பிரிவு வீழ்ச்சியடைந்திருந்தால் திறைமையான புலனாய்வாளர்களை எங்களால் வழங்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) இடம்பெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையின் இராணுவ, பொலிஸ் புலனாய்வுப் பிரிவு வீழ்ச்சியடைந்துள்ளதா? அல்லது ஆட்சியாளர்கள் அடாவடிகளுக்கு துணைபோகின்றனரா என்ற கேள்விகள் எழுகின்றன.

அதாவது கடந்த 17ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், தியாக தீபம் திலீபனின் ஊர்தியில் செல்லும் போது பொலிஸ், இராணுவ புலனாய்வாளர்கள் முன்னாலேயே சிலரால் தாக்கப்பட்டுள்ளார். மிகவும் கொடூரமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனை ஏன் தடுக்கவில்லை என்ற கேள்விகள் உள்ளன. இது தொடர்பில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. இது தொடர்பில் கண்டனங்கள் உள்ளன. இதனை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்கின்றேன்.

எங்கள் மக்களின் மீதான காழ்ப்புணர்ச்சியின் வெளிபாடாகவே இந்தச் சம்பவம் உள்ளது. இதனை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் இதன் தொடர்ச்சி மிகவும் மோசமாக இருக்கும் என்பதுடன், இன்னும் தாக்குதல்கள் அதிகரிக்கும்.

அண்மையில் அநுராதபுரம் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக்க பிரேமரட்ன மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது. அதனை யார் நடத்தினர், அவர்களிடம் துப்பாக்கி வந்தது என்ற கேள்விக்கு பொலிஸ் பாதுகாப்பு அமைச்சர் பதிலளிக்க வேண்டும். இங்கே இலங்கையின் புலனாய்வுத்துறை வீழ்ச்சியடைந்திருக்க வேண்டும் அல்லது ஆட்சியாளர்கள் இவ்வாறான செயற்பாடுகளுக்கு துணைபோக வேண்டும். இதில் ஒன்றுதான் சரியாக இருக்க வேண்டும்.

உங்களிடம் புலனாய்வாளர்கள் இல்லையென்றால் புலனாய்வாளர்களை உங்களுக்கு தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். மிகவும் திறமையானவர்கள் உள்ளனர். இரண்டு, மூன்று நாள்களில் இந்த விடயத்தை யார், எதற்காக செய்தனர் என்பதனை கண்டறியும் புலனாய்வாளர்கள் உள்ளனர்.

எவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து சபாநாயகர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்தில் எங்கள் மீதும் துப்பாக்கி சூட்டை நடத்தி, நாங்கள் இறந்தால் அதனை கண்டுபிடிக்க முடியாத நிலைமையே உள்ளது ” என்றார்.

## மக்களை தவறாக வழிநடத்த எதிர்க்கட்சிகள் முயல்கின்றன

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக அமைச்சர் டிரான் அலஸ் எம்.பிக்களுக்கு செவ்வாய்க்கிழமை (19) தெளிவுபடுத்தல் சந்திப்பொன்றை நடத்தவுள்ளதாக சபாநாயகர் அறிவிப்பு விடுத்தார்.

அதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கையில் உள்ள விடயங்கள் மறைக்கப்படுவதாகத் தெரிவித்த கருத்து தொடர்பிலேயே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறுகையில்,

“சபாநாயகரின் அறிவிப்பில் எந்த இடத்திலும் அவர் ஆலோசனை வழங்க வருவதாகக் கூறப்படவில்லை. விருப்பப்பட்டால் பங்கேற்கலாம்; இல்லை என்றால் பங்கேற்காமல் இருக்க முடியும். எதிர்க்கட்சி என்ற ரீதியில் மக்களை தவறாக வழிநடத்தும் கருத்துகளை கூறாமல் இருப்பது உங்கள் பொறுப்பு” என்றார்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி, “நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக உடனடியாக வழக்குத் தொடரப்பட வேண்டும் என ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை கூறுவதாக நான் கூறுகின்றேன். ஆனால் அவர் பதவி உயர்வு பெற்றார். இப்போது அவர்தான் எங்களுக்கு அறிவுரை வழங்குகிறார். வெட்கமாக இல்லையா?” என்றார்.

இதற்கு அரச தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பதிலளிக்கையில் ,

“சபாநாயகர் அவர்களே, இவர்கள் நாட்டுக்கு தவறான புரிதலை ஏற்படுத்த முயல்கின்றனர். இது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருவதாக தெளிவாக கூறப்பட்டுள்ளது. அறிக்கையைப் படித்தால் உங்களுக்கே புரியும். நீங்கள் கூறும் காரணங்களை இங்கே கேட்டு நீங்களே சரி செய்து கொள்ளலாம். இத்தாக்குதல்கள் அவர்களின் காலத்தில் நடந்தன. நாட்டுக்கு தவறான செய்தியை கொடுக்க வேண்டாம்” என்றார்.

# திலீபனை நினைவேந்த கொழும்பில் தடை

செவ்வாய் (19) நண்பகல் 12 மணி முதல் நாளை நண்பகல் 12 மணி வரை மருதானை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு தடை விதித்து மாளிகாகந்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

போதைப் பாவனையை ஒழிக்க

# சிலாவத்தை கிராம மக்களின் முன்மாதிரியான நடவடிக்கை

■ சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சிலாவத்தை கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த, கிராம அமைப்புகள், இளைஞர்கள் ஒன்றுதிரண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

தமது கிராமத்தில் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகள், பாதிப்புகள் தொடர்பில் சம்மந்தப்பட்ட தரப்புகளின் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்பதை உணர்ந்த கிராம மக்கள், கிராம அலுவலர் தலைமையில் முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.பி.எம்.ஏ அமரசிங்கவின் பங்குபற்றுதலுடன் கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், விளையாட்டு கழகம் உள்ளிட்ட கிராம மட்டத்தில் உள்ள அமைப்புகளையும் கிராம மக்களையும் இளைஞர்களையும் உள்ளடக்கி சிவில் பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிவில் பாதுகாப்பு குழு, தமது கிராமத்தில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றவர்களை கண்டறிந்து, பொலிஸாரை அழைத்து அவர்களை கைது செய்து, சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது.

அந்தவகையில், தீர்த்தக்கரை பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இதேபோன்று கிராமத்தில் இடம்பெற்ற கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களையும் குறித்த சிவில் பாதுகாப்பு குழு கண்டுபிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளது. அத்தோடு கிராமத்தில் போதைப்பொருள் விற்பனை செய்வோரும் அடையாளம் காணப்பட்டு, கைது செய்யும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவ்வாறான நபர்களுக்கு பொலிஸார் உதவி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில், குறித்த கிராம மக்கள் இணைந்து முன்னெடுத்துச் செல்லும் இந்த நடவடிக்கைக்கு பலரும் பாராட்டுகள் தெரிவித்து வருகின்றனர்.

வேன் விபத்து:

# சிறுமியும் சாரதியும் உயிரிழப்பு

■ எம்.எஸ்.எம் நூர்தீன்



காத்தான்குடியிலிருந்து கொழும்பு விமான நிலையம் நோக்கிச் சென்ற வேன், சந்திவெளியில் வைத்து விபத்துக்குள்ளானதில் நான்கு வயது சிறுமியும் சாரதியும் உயிரிழந்துள்ளனர்.

சந்திவெளி பிரதான வீதியில் திங்கட்கிழமை (18) பிற்பகல் இடம்பெற்ற வேன் விபத்தில், காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் உயிரிழந்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர், சவூதி அரேபியாவில் இருந்து வந்த மகள், மருமகன் ஆகியோரை ஊருக்கு அழைத்து வருவதற்காக வேனில் கொழும்பு விமான நிலையம் நோக்கி சென்று கொண்டிருந்தபோது, சந்திவெளி பிரதான வீதியில் மரம் ஒன்றுடன் குறித்த வேன் மோதியதில், இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த வேனில் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வேன் சாரதியான முஹம்மது ஹுசைன், அவரது பேத்தியான நான்கு வயது சிறுமி ஆகியோர் உயிரிழந்துள்ளனர்

சாரதி ஹுசைனின் மனைவி படுகாயமுற்ற நிலையில், மட்டக்களப்பு போதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கனடா பயணம்



'மிஸ் யுனிவர்ஸ்; கனடா' என்ற பிரபல அமைப்பின் ஊடாக பலதரப்பட்ட திறமைகளை க்கொண்ட பெண் சாதனையாளர்களுக்கு பட்டமளித்து கௌரவப்படுத்தும் நிகழ்வு, டொரோன்டோ நகரில் அமைந்துள்ள ஸ்காபுரோ மகாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இவ் விஜயத்தின்போது கல்வி இராஜாங்க அமைச்சர் கனடிய நாட்டிலுள்ள பல்வேறு சிவில் சமூக மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளோடு கல்வி மேம்பாட்டுக்கான உதவிகள் பெற்றுக்கொள்வது தொடர்பான கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவுள்ளார்.

# விருது வழங்கி கௌரவம்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நாடகக் கலைஞரும் எழுத்தாளருமான மறவன்புலவு செல்லம் அம்பலவாணர் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் கலாரத்ன விபூஷண் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வத்தளை நகர மண்டபத்தில் விருது வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(17) நடைபெற்றது.- பி.கேதீஸ்

பாடசாலை முடியும் வேளையிலும்

# பொலிஸார் கடமைக்கு வரவேண்டும்

■ பு. கஜிந்தன்



கிளிநொச்சி, முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் சுமார் 550 மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

முருகானந்தா ஆரம்ப பாடசாலைக்கு 300க்கும் அதிகமான மாணவர்கள் பல பகுதிகளிலும் இருந்து, பஸ், மோட்டார் சைக்கிள்களில் வருகின்றனர். இந்நிலையில் பாடசாலை முன்பாக உள்ள வீதிக் கடவையில் காலை வேளையில் மாத்திரமே பொலிஸார் கடமைக்கு வருவதாகவும், பாடசாலை முடிவடைந்து மாணவர்கள் வீடு செல்லும் வேளை, பொலிஸார் வீதி பாதுகாப்பு கடமைக்கு வருவதில்லை எனவும் பெற்றோர், மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

A-35 பிரதான வீதியில் வீதி விபத்துக்கள் அதிகம் இடம்பெறுகின்ற காரணத்தால், மாணவர்களின் பாதுகாப்பு கருதி பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாடசாலை சமூகத்தால் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.



# மழை வெள்ளத்தால் மக்களுக்கு சிரமம்

■ பாறுக் ஷிஹான்

இந்த மழை வெள்ளத்தின் காரணமாக, அம்பாறை மாவட்டத்தின் பெரியநீலாவணை, பாண்டிருப்பு, நற்பிட்டி முனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று பகுதிகளில் பல குடும்பங்கள் வெள்ளத்தால் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளதுடன் தற்போது அங்குள்ள மக்கள் வீடுகளுக்குள்ளும் வெள்ளம் உட்புகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணம், மழை நீர் வழிந்தோடுவதற்குரிய முறையான வடிகால் அமைப்பு இன்மையே என்ற குற்றச்சாட்டும் மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசங்கள் ஒவ்வொரு வருடமும் மழையாலும் அதனால் ஏற்படும் வெள்ளத்தாலும் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சிலவேளை இம்மக்கள் இடம்பெயரும் நிலைமையும் ஏற்படுகிறது.

இப்பகுதிகளில் வசிக்கின்ற சில மக்களின் வாழ்வாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு ஒழுங்கான வீடமைப்பு வசதி இல்லை. ஒழுங்கான வீதி கிடையாது; மின்சார வசதி இல்லை; நீர் வடிந்தோட ஒழுங்கான வடிகால்கள் இல்லை. சிறுவர்கள் பாடசாலைக்கு செல்ல கஷ்டப்படுகின்றனர். தொழில் செய்வது சிரமமாக உள்ளது. இதுதான் அம்மக்களின் நிலையாக உள்ளது.

கடந்த சில நாள்களாக பெய்துவரும் அடைமழை காரணமாக, அப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதால், பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் அன்றாட உணவுகளை சமைத்து உண்ண முடியாத நிலையில் மக்கள் காணப்படுகின்றனர்.

தற்போது வெள்ள நீர் வடிந்தோடுவதற்காக சில முகத்துவாரங்கள் வெட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் வெள்ள நீர் தேங்கி காணப்படுகின்ற நிலைமையே தொடர்கதையாகவுள்ளது.

# வெளிநாட்டு ஆசையால் ஏமாற்றமடைந்த ஆசிரியர்

■ பு கஜிந்தன்



ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர், அவுஸ்திரேலியா செல்வதற்காக கொழும்பில் உள்ள தனியார் பயண நிறுவனத்துக்கு கட்டம் கட்டமாக ரூபாய் 75 இலட்சம் ரூபாயை வங்கியில் வைப்புச் செய்துள்ளார்.

வங்கியில் பணம் வைப்பிலிட்டும் நீண்ட காலமாக ஏமாற்றப்பட்டு வந்தமையால், யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்தார். அதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாண மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸார், கொழும்பைச் சேர்ந்த சந்தேகநபரை கைது செய்து, நேற்று (19) நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது, சந்தேநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

குறிப்பிட்ட சந்தேகநபரிடம் பணம் கொடுத்து ஏமாந்த மேலும் சிலர், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# அலைபாயும் பேராசையால் பேரிழப்பே மிச்சமாகும்

எதற்கும் பேராசைபடும் மனிதர்கள் மரணத்துக்கு மட்டுமே அஞ்சுகின்றனர் எனப் பலரும் கூறுவதை கேள்விப்பட்டிருக்கின்றோம். அந்தளவுக்கு ஆசையில் மிதந்துகொண்டே இருப்பார்கள். இதில், உழைப்பு எதுவுமின்றி இலவசமாக கிடைப்பதற்கும் அதிர்ஷ்டத்துக்கும் பலரும் காத்திருந்து, காத்திருந்து தங்களுடைய வாழ்நாளையே வீணாக்கிவிடுவர்.

திருடர்கள, கொள்ளையடிப்போர், வழிப்பறியில் ஈடுபடுவோர் இவர்களுக்கு மத்தியில் ஏமாற்று பேர்வழிகளின் கைவரிசை எண்ணிலடங்காதவை. அவ்வாறானவர்களிடம் ஏமாந்தவர்கள் மீண்டும், மீண்டும் அதற்காகவே ஏமாந்து விடுகின்றனர்.

அலைபேசி, திறன்பேசி ஆகியவற்றின் பாவனைகள் அதிகரித்துள்ளன. அதில்வரும் குறுஞ்செய்திகளுக்கு பதிலளித்த பலரும் தங்களுடைய வங்கிக்கணக்கில் வைப்பிலிருந்த பெரும் தொகை பணத்தை இழந்துள்ளனர்.

பெருந்தொகை பணத்தை உதவுவதாக கூறி, வட்ஸ்அப்க்கு செய்திகளை அனுப்பும் ஒரு குழுவினர், பணத்தை கட்டுக்காட்டாக அடுக்கி பொதிசெய்வதைப் போல படங்களை அனுப்பி, இறுதியில், சுங்கப் பணம் கட்டவேண்டும் என்றும், அதற்காக இலட்சக்கணக்கில் பணத்தை கறந்துமுள்ளனர்.

ஆரம்பத்தில் ஈசி கேஸ்ஸில் இவ்வாறான ஏமாற்றுவேலைகளில் ஈடுபட்டிருந்தவர்கள், மனங்களை கவரும் வகையிலான மின்னஞ்சல்களை அனுப்பி, கடனட்டை அல்லது வங்கி அட்டைகளின் இரகசிய எண்களைத் திருடி, பொருட்களாகவோ, பணமாகவோ கொள்ளையடித்து விடுகின்றனர்.

இவ்வாறான மோசடிக்காரர்களின் வலைக்குள் விழுந்துவிடுவோரில் ஒருசிலர் மட்டுமே உண்மையை சொல்லி, தங்களைப் போல மற்ற எவருமே பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றனர். ஏமாந்தவர்களில் இன்னும் சிலர், தங்களைப் போலவே பலரும் ஏமாறவேண்டுமென்ற கெட்ட நோக்கத்தில் மௌனம் காத்துவிடுகின்றனர்.

நமது நாட்டு மக்களில் பெரும்பாலானவர்களிடம் வெளிநாட்டு மோகம் அதிகரித்துவிட்டது. சட்டரீதியில் பயணத்தை மேற்கொள்ள முடியாதவர்கள் அல்லது அதற்காக தகுதியில்லாதவர்கள் போலியான கடவுச்சீட்டு மற்றும் விசாக்களை பெருந்தொகை பணத்தைக் கொடுத்து செய்துகொண்டு, விமான நிலையத்தில் சிக்கிக்கொள்கின்றனர்.

தூதுவராலயங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்கள் ஊடாக முறையாக விண்ணப்பம் செய்து. விசாக்களை பெற்று வெளிநாடுகளுக்கு பயணிக்க முடியாதவர்கள், போலியாக விளம்பரம் செய்வோரின் வலையில் சிக்கி பல இலட்சம் ரூபாயை இழந்து நிர்க்கதியாகவே நிற்கின்றனர்.

இன்னும் சிலர், கடல்வழியாக சட்டவிரோதமான பயணங்களை மேற்கொண்டு, நடுக்கடலில் வைத்து சிக்கிக்கொள்கின்றனர். இல்லையேல் ஏதாவது விபத்தில் சிக்கி உயிரிழக்கின்றனர். தப்பித்தவறியேனும் அந்த நாட்டின் தரை எல்லைக்குச் சென்றவர்கள் சிக்கிக்கொள்கின்றனர்.

அவ்வாறானவர்கள் அகதிமுகாம்களில் படும்பாடு சொல்லில் அடங்காதவை. தங்களுடைய நாட்டுக்கு அகதிகளாக வரவேண்டாம், சட்டவிரோதமான கடல் பயணங்களை மேற்கொள்ள வேண்டாமென அறிவுறுத்தப்பட்டாலும் அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கொலி போலவே பலருக்கும் இருக்கின்றது.

தங்களுக்கு வரும் விளம்பரம், குறுஞ்செய்தி, மின்னஞ்சல் ஆகியவற்றில் உண்மையானது எது, போலியானவை எவை? என்பதை இனங்கண்டு கொள்வதன் ஊடாகவே ஏமாறாமல் இருக்கலாம் என்பதை நினைவில் கொள்க!


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

தான் வாழும் சமூகத்துக்கு எந்த நன்மைகளும் செய்யாமல், பிறருக்கு வேண்டுமென்றே தீமைகளைச் செய்பவர்கள், கடவுளிடம் வரம் கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

வெளியில் உத்தமராகக் காட்டுபவர்கள், தாம் செய்யும் செயல்கள் மக்களுக்குத் தெரியாது எனத் தப்புக்கணக்கு போடுகின்றார்கள். இத்தகையோர் அடையும் திருப்திதான் என்ன?

எவருக்காவது நன்மைகள் செய்யும்போது, ஏற்படும் திருப்தி அலாதியானது. பொது நலத்தொண்டுகளில் இளைய தலைமுறையினர் ஈடுபடுவது மகிழ்ச்சியானது.

தெருவோரத்தில் கண்டெடுத்த பணப்பையை, உரியவரிடம் கையளிக்கும் நிகழ்வுகளை தினமும் பத்திரிகைகளில், படிக்கின்றோம்.

ஒருவருக்கு உதவுவது எமது இதயத்தை குளிரவைக்கும் செயலாகும். புற அழகை விட, அக அழகே பெரிது. மக்களை நேசிக்கும்போது, யாவரும் எம்மவர்கள் என்ற எண்ணங்கள் உருவாகின்றன.

உலக மக்களின் துன்பங்களைக் கண்டு திரும்பிப் பார்க்காமல் செல்வது மானிட தர்மம் இல்லை. இரக்கம் இல்லாமல் வாழ்பவன், நிம்மதியாக வாழ முடியாது. அன்பே அறம்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### உருகாமத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்

மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள உருகாமம் கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் காரணமாக வீடுகள், தோட்டங்கள், மின்சார கம்பங்கள் என்பன நாசமாகியுள்ளன.

வீடுகளையும் பயிர்ச் செய்கைகளையும் அழித்து நாசமாக்கியுள்ளதுடன் அந்த மக்களின் வாழ்வாதாரங்களையும் சேதமாக்கியும் உள்ளன. யானைகளிடம் இருந்து மக்கள் மயிரிழையில் உயர் தப்பி காயங்களுடன் ஓடித்தப்பியுள்ளனர்.

நேற்று முன்தினம் (18) அதிகாலை சுமார் 1.30 மணியளவில் காட்டு யானைகள் ஊருக்குள் நுழைந்து, காணிகளுக்குள் பிரவேசித்து, அங்குள்ள வாழைமரங்களை நாசம் செய்துள்ளது.

அதே யானைகள் கிராமத்துக்குள் உள்ளே நுழைய, மின்சார வேலிகளையும் சேதப்படுத்தி உள்ளது. இதனால் மக்கள் பல அசௌகாரியங்களை எதிர் நோக்குவதாகவும் குறித்த யானைகளின் அட்டகாசம் தொடர்பாக அதிகாரிகளிடம் பல தடவைகள் எடுத்துக் கூறியும் எதுவும் நடைபெறவில்லை எனவும் அப்பகுதி வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ரீ.எல் ஜவ்பர்கான்

# உள்நாட்டு விசாரணையா, சர்வதேச விசாரணையா?



எம்.எஸ்.எம். ஐயூப்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுக்குப் பின்னால், அரச உளவுத்துறையினர் இயங்கியதாக, பிரிட்டனின் சனல் 4 தொலைக்காட்சி, விவரணப் படமொன்றின் மூலம் அண்மையில் தெரிவித்த கருத்தை ஆராய, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.ஐ. இமாமின் தலைமையில் விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்‌ஷவை பதவிக்கு கொண்டு வர, நாட்டில் பாதுகாப்பற்ற நிலைமையை உருவாக்கவே, முஸ்லிம் பயங்கரவாத குழுவொன்றைப் பாவித்து, அரச உளவுத்துறையின் தற்போதைய பணிப்பாளராக இருக்கும் சுரேஷ் சலே, 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுக்கிழமையன்று மூன்று உல்லாசப் பிரயாண ஹோட்டல்களையும் மூன்று கிறிஸ்தவ தேவாலயங்களையும் தாக்கி, 269 பேரை கொன்றார் என்ற கருத்துப்பட சனல் 4 தொலைக்காட்சியில் தோன்றிய அசாத் மௌலானா என்பவர், சூசகமாகக் கருத்துத் தெரிவித்து இருந்தார்.

மௌலானா ஒரு காலத்தில், தற்போது இராஜாங்க அமைச்சராக இருக்கும் 'பிள்ளையான்' எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனின் அந்தரங்க செயலாளராக இருந்தவராவார். இப்போது அவர் சுவிடசர்லாந்துக்குச் சென்று, அங்கு அரசியல் புகலிடம் கோரியிருக்கும் நிலையிலேயே, சனல் 4 தொலைக்காட்சியின் நேர்காணலில் தோன்றி இருக்கிறார்.

அத்தோடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவரும் கேட்காத நிலையில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலோடு சம்பந்தப்பட்ட மற்றொரு விடயத்தைப் பற்றி விசாரணை செய்வதற்காக பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

முன்னாள் சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேரா அப்பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு சில நாள்களுக்கு முன்னர், 2019 ஆம் ஆண்டு மே மாதம் தொலைக்ககாட்சி நேர்காணல் ஒன்றின் போது, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னால் பாரிய சதித்திட்டமொன்று இருந்துள்ளதாக கூறியிருந்தார். அவரது அக்கருத்தைப் பற்றி விசாரணை செய்யவே, இந்தத் தெரிவுக்குழு நியமிக்கப்படவிருக்கிறது.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கம் பதவியில் இருக்கும் போதே, முஸ்லிம் தீவிரவாதக் குழுவொன்று இந்தப் பயங்கரவாத தாக்குதலை மேற்கொண்டது. அந்த அரசாங்கம், அது தொடர்பாக நடத்திய விசாரணைகளைப் பற்றி, கத்தோலிக்க திருச்சபை திருப்தியடையவில்லை. அந்த அரசாங்கம் நியமித்த விசாரணை ஆணைக்குழு, கோட்டாபய ராஜபக்‌ஷ அரசாங்கத்தின் காலத்திலும் விசாரணைகளை மேற்கொண்டு அதன் அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபயவிடம் கையளித்தது.

கோட்டாபயவின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையைப் பற்றியும் திருப்தியை தெரிவிக்காத பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, சனல் 4 தெரிவித்த கருத்துகளைப் பற்றி ஆராய, சர்வதேச விசாரணையொன்று வேண்டும் என்றார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் அக்கருத்தை வரவேற்றார். ஆனால், ஜனாதிபதி தற்போது ஜனாதிபதி விசாரணைக் குழவொன்றை நியமித்துள்ளமை, சர்வதேச விசாரணை எதுவும் நடைபெறாது என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

ஐ.நா மனித உரிமை பேரவையும் பாரதூரமாகக் கவனத்தில் கொண்டுள்ள நிலையில் இத்தாக்குதலைப் பற்றி சர்வதேச விசாரணையொன்று நடைபெறுவதை அரசாங்கம் விரும்பாதது ஏன் என்ற கேள்வியையும் எழுப்பலாம். வடக்கு, கிழக்கு போர் தொடர்பாக, சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் விரும்பாதமைக்கு காரணம் பாரியளவிலான மனித உரிமை மீறல்களுக்கு அரச படைகள் குற்றவாளிகளாவர் என்ற பயத்தினாலேயே ஆகும். இத்தாக்குதலைப் பற்றிய சர்வதேச விசாரணையை எதிர்ப்பதற்கும் அதுவேதான் காரணமா என்ற சந்தேகம் எழுவதை தவிர்க்க முடியாது.

இந்த விடயத்துக்காக, ஏற்கெனவே ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டு, விசாரணை நடத்தப்பட்டு அவற்றின் அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அரச உளவுத்துறையினர் இத்தாக்குதலுக்குப் பின்னால் இயங்கினர் என்ற கருத்தும் புதியதல்ல. அந்த நிலையில், சர்வதேச விசாரணைக்குப் பதிலாக மேலும் உள்நாட்டு விசாரணைக்குழுக்களும் தெரிவுக்குழுக்களும் எதற்காக?

அரசாங்கமும் ஜனாதிபதியும் முன்னைய விசாரணைக் குழுவினதும் தெரிவுக் குழுவினதும் முடிவுகளை ஏற்க தயாரில்லையா? அவ்வறிக்கைகளை நிராகரித்தாலும் புதிதாக ஒன்றுக்குப் பதிலாக இரண்டு விசாரணைகள் எதற்காக?

சனல் 4 வின் விவரணப் படத்தில் கூறப்பட்ட உளவுத்துறையினரின் சதித் திட்டத்தைப் பற்றி ஆராய்வதாக இருந்தாலும், உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலின் பின்னால் பாரிய சதித் திட்டமொன்று இருந்துள்ளது என்ற முன்னாள் சட்டமா அதிபரின் கூற்றைப் பற்றி விசாரணை செய்வதாக இருந்தாலும், அதற்காக ஒரே நபர்களைத்தான் சாட்சிகளாக அழைக்க வேண்டி வரும்.

அரச உளவுத்துறையினரோ அல்லது வேறு ஏதாவது சக்தியோ இத்தாக்குதலில் சம்பந்தப்படாவிட்டாலும், சஹ்ரான் ஹாஷிம் தலைமையில் இயங்கிய தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பினரே இத்தாக்குதலை மேற்கொண்டனர் என்பதில் எவருக்கும் சநதேகம் இல்லை. அவ்வமைப்பினர் வருடக் கணக்கில் அல்லது மாதக் கணக்கில் இரகசியமாக சில இளைஞர்களின் மனதை மாற்றி, பணம் திரட்டி, வெடிப்பொருட்களை கொள்வனவு செய்து, பயிற்சி பெற்றுத்தான் அத்தாக்குதலை நடத்தினர் என்பதிலும் சந்தேகம் இல்லை. இவ்வனைத்தும் இரகசியமாக நடந்தன என்றால், அது சதித் திட்டம் அல்லவா? அவ்வாறாயின் இத்தாக்குதலுக்குப் பின்னால் பெரும் சதித் தட்டம் ஒன்று இருந்துள்ளது என்ற முன்னாள் சட்ட மாஅதிபரின் கருத்தில் என்ன புதுமை இருக்கிறது?

அவர் அரசியல் சதித் திட்டமொன்றைப் பற்றி எங்கும் குறிப்பிடவில்லை. சதிகாரர்கள் பிறிதொரு மட்டத்தில் இருந்துள்ளனர், சஹ்ரான் போன்றவர்களும் அதில் கலந்துகொண்டு இருக்கலாம் என்று அவர் கூறியிருந்தார். தேசிய தௌஹீத் ஜமாஅத்தில் சஹ்ரானுக்கு மேலான ஓர் இடத்தில் தான் உண்மையான சதிகாரர்கள் இருந்துள்ளனர் என்பதையே அவர் கூறியிருக்கிறார் என்றும் வாதிடலாம்.

ஏற்கெனவே அரச உளவுத்துறையினரிடம் இருக்கும் தகவல்களை ஆராயும் போது, இந்தச் சதித்திட்டம் தெளிவாகிறது என்றும் தப்புல டி லிவேரா கூறியிருந்தார். அவ்வாறாயின் அரச உளவுத்துறையினரிடம் இருக்கும் தகவல்களை ஆராய்ந்த அத்துறையின் ஏனைய அதிகாரிகளுக்கும் அவர் குறிப்பிடும் சதித்திட்டத்தின் சுபாவம் விளங்கியிருக்க வேண்டும். சதித் திட்டம் பற்றிய விசாரணை இன்னமும் முடிவடையவில்லை என்றும் அவர் கூறுகிறார். அதாவது சதித் திட்டம் பற்றிய கருத்து திட்டவட்டமானதல்ல.

பாராளுமன்ற தெரிவுக்குழுக்கள் மூலம் இது போன்ற குற்றச் செயல்களைப் பற்றி விசாரணை நடத்தி, ஏதாவது பயன் உண்டா என்பதும் சிந்திக்க வேண்டிய விடயமாகும். தெரிவுக்குழுக்களில் பெரும்பாலும் ஆளும் கட்சியினரே பெரும்பான்மையாக நியமிக்கப்படுவர். அதாவது, தற்போதைய நிலையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களே பெரும்பான்மையாக இருப்பர். அவ்வாறானதொரு தெரிவுக் குழுவால், கோட்டாபயவின் தேர்தல் வெற்றிக்காக, அரச உளவுத்துறையினர் பயங்கரவாத தாக்குதலொன்றை நடத்தினர் என்ற கருத்து உள்ளிட்ட சதித் திட்டம் ஒன்றைப் பற்றிய குற்றச்சாட்டு தொடர்பாக, நடுநிலையான விசாரணையை நடத்தலாமா?


உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று சில மாதங்களிலும் அப்போதைய சபாநாயகர் கரு ஜயசூரிய அத்தாக்குதலைப் பற்றி விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமித்தார். அக்குழு குற்றச்செயலைப் பார்க்கிலும் காத்தான்குடியில் வீதிகளில் நடப்பட்டு இருக்கும் பேரீச்சப் பழ மரங்கள், அரபு பெயர்ப் பலகைகள், சுமார் நூறு வருடங்கள் பழைமையான மத்ரஸாக்கள், காதி நீதிமன்றங்கள், அண்மைக்காலமாக பரவிய புர்க்கா மற்றும் நிக்காப் போன்ற முகமூடிகள் ஆகியவற்றைப் பற்றி விசாரித்து காலத்தை கடத்தியது. அவை பயங்கரவாத கருத்துகளை பரப்புகின்றன என்ற அடிப்படையிலேயே அவ்வாறு அவற்றைப் பற்றி விசாரித்தனர். அவை அனைத்தும் இன்னமும் நாட்டில் இருக்கின்றன. இப்போது எவரும் அவற்றைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை.

ஞானசார தேரர் போன்றவர்கள் பரப்பிய கருத்துகள் காரணமாகவே அவை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன. அதைத் தவிர அவற்றுக்கும் குண்டுத் தாக்குதல்களுக்கும் இடையில் தொடர்பு இருக்கிறது என்று சந்தேகிக்க தெரிவுக்குழுவுக்கோ அல்லது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கோ எவ்வித ஆதாரமும் இருக்கவில்லை.

இனவாதிகள் பரப்பிய கருத்துகள் பொலிஸார் நடத்திய விசாரணைகளிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. எவ்வித ஆதாரமுமின்றி இனவாத பிரசாரங்கள் காரணமாகவே சிலர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் சிலர் போதிய ஆதாரங்களின்றி விடுதலை செய்யப்பட்டதன் பின்னர், மீண்டும் இனவாதிகள் குழப்பவே, மீண்டும் கைது செய்யப்பட்டு, பின்னர் மீண்டும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறானதொரு நிலைமை நாட்டில் இருப்பதாலும் நாட்டின் தலைவர்கள் இது போன்ற குற்றச் செயல்களையும் அரசியல் கண்கொண்டு அணுகுவதன் காரணமாகவும் உள்நாட்டு விசாரணைகள் மூலம் தீர்வு காண்பது என்பது மிகவும் கடினமான விடயமாகும்.

# இனங்களுக்கு இடையிலான ஐக்கியம்



ச. கிறிஸ்ரீனா
இரண்டாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



பல்லின சமூகத்தன்மை கொண்ட இலங்கை திருநாட்டில் தமிழர், முஸ்லிம், சிங்களவர், பறங்கியர் போன்ற பல இனத்தவர்கள் வாழ்கின்றனர். ஆரம்ப காலத்தில் ஆண், பெண் என இரு வகையாக படைக்கப்பட்ட மனித இனத்தில் மாற்றம் ஏற்பட்டு, அது பல இனங்களாக தோற்றுவிக்கப்பட்டது. விஞ்ஞான வளர்ச்சி நிலையானது; அது மக்களிடையே பாரிய மாற்றத்தை தோற்றுவித்துள்ளது. இவ்வாறான வேளையில், மக்களிடையே போட்டி மனப்பாங்கு மற்றும் பகைமைகளும் அதிகரிக்க ஆரம்பித்தன. இவை படிப்படியாக வளர்ச்சி நிலை அடைந்து, இனரீதியான வர்க்க முரண்பாடுகளை தோற்றுவித்தன.

அண்மித்த காலத்தில் நம்முடைய நாட்டில் ஒரு சமாதான நிலை ஏற்பட்டு விட்டதாக நாம் எண்ணிக் கொண்டாலும் போரின் தாக்கங்களானது பச்சிளம் குழந்தை முதல் பல்லில்லா பாட்டி வரை வடுக்களாக பதிந்து நீங்கா வண்ணம் நிலை பெற்றுள்ளன. இவை, இன ஒற்றுமை இல்லை என்பதை பிரதிபலித்து காட்டுகின்றன. ஏனைய நாடுகளை விட, எமது நாட்டில் கல்வியறிவு நிலை அதிகரித்து காணப்பட்டாலும் எமது நாட்டில் இன ரீதியான வேறுபாடு இன்றும் மாற்றம் காணவில்லை.

இன ஒற்றுமையைப் பற்றி நாம் பேசினாலும் இன ஒற்றுமை எங்கே என்றால் அது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. ஐந்தறிவு ஜீவன்கள் கூட இன வேறுபாடு இல்லாமல் நடந்து கொள்ளும் போது, மனிதனால் ஏன் அவ்வாறு செய்ய முடியவில்லை? மற்றவர்களிடத்தில் நமக்குள்ள அன்பு, அக்கறை போன்றவற்றை வெளிப்படுத்தும் நிலையாக மனிதநேயம் காணப்படுகிறது. மனிதநேயம் காணப்படாமை இன ரீதியான பிரிவுக்கு ஒரு காரணமாக உள்ளது. மனித மனங்களில் இது வியாபிக்க வேண்டும். இவ்வாறு இருந்தால் மட்டுமே எல்லோரிடமும் மனிதநேயத்தை விதைக்க முடியும். அனைத்து மக்களும் மனிதநேயம் கொண்டவர்களாக இருக்கும் பட்சத்தில் இனங்களுக்கு இடையே சிறிதளவானது பிரிவினையை நம்மால் போக்க முடியும்.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்னும் கூற்றுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு மனிதனும் மற்றவருடைய மனநிலையை புரிந்து கொண்டு வாழ வேண்டும். எல்லோரும் தான்தோன்றித்தனமாக வாழ்க்கை வாழாமல், ஒரு கட்டுப்பாடோடு இப்படித்தான் வாழ வேண்டும் என்ற எண்ணத்தோடும் வாழ வேண்டும். இனங்களிடையே ஒரு சுமுகமான உறவினை ஏற்படுத்த மனித விழுமியங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களின் உணர்வுகளை மதித்து வாழமுற்பட்டால், நாட்டில் நிலவிவரும் இன ரீதியான முரண்பாட்டைத் தீர்க்கலாம்.

நாம் அனைவரும் இலங்கையர்கள் எனும் உணர்வோடும், சகோதர உணர்வோடும் பாசத்தோடும் வாழப் பழக வேண்டும். தேச உணர்வு நமக்கு மிகவும் அவசியமான ஒன்று. நாம் அனைவரும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் என்ற தேச உணர்வோடு வாழும் போது, இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். ஓர் இனம் மற்றோர் இனத்தை அடக்கி ஆள முற்படும் பட்சத்தில் மோதல்கள் தலைதூக்குகின்றன. அனைத்து இனத்தையும் சமமான வகையில் கவனிக்க வேண்டும். இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வு இல்லாவிட்டால் நாம் பல அழிவுகளை சந்திக்க நேரிடும்.

இனப் பண்பாடு என்பது முக்கியமான ஒன்றாகும். இது இருந்தால் மாத்திரமே இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். பண்பாடு என்பது குறிப்பிட்ட இன மக்களின் பழக்கம், வழக்கம், நம்பிக்கைகள் போன்றவற்றை குறித்து நிற்கின்றது. ஓர் இனத்தின் பண்பாட்டை மற்றைய இனம் மதிக்க வேண்டும். ஒவ்வோர் இனத்தவர்களும் ஒற்றுமை, பாசம், சமமான வசதி வாய்ப்புகளுடன் வாழும் போது அவரவர் பண்பாடு பற்றி ஒவ்வோர் இனத்தவரும் அறிந்து, மதித்து வாழ வேண்டிய சந்தர்ப்பம் உண்டு. ஒரு பல்லின மக்கள் கொண்ட சமூகத்தில் மற்றவரை மதிக்கும் பண்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத்தன்மை போன்றவை அவசியமானவையாகும்.

பல இன மக்கள் ஒன்றாக வாழும் போது, பண்பாடுகளைப் பற்றி அறிவதற்கான வாய்ப்புகள் உருவாகும். உணவு முறை, உடை, திருமண முறை, வணக்க முறை பற்றி வேறுபாடுகளால் ஒற்றுமைகளை உணர முடியாதுள்ளது. ஒருவருடன் ஒருவர் பழகும் போது அவர்களை பற்றி அறியும் வாய்ப்பு ஏற்படுகிறது. அவர்களுடைய சம்பிரதாயங்கள் பற்றியும் அறிய முடிகிறது. நாம் அனைவரும் மற்றவர்களின் பண்பாடுகளை மதித்து பேணி நடப்பது சிறப்பானதாகும். இவ்வாறு செய்வதன் மூலம், இன ஒற்றுமையை எம்மாலே ஏற்படுத்த முடியும். அரசியல், பொருளாதார, சமூக விடயங்களில் அனைத்து இன மக்களும் சமமான வகையில் கவனிக்கப்பட வேண்டும். இவ்வாறு இல்லாமல் பெரும்பான்மை இனத்திற்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்பட்டு அதற்கே விசேட சலுகைகளும் வழங்கும் பட்சத்தில் அங்கு சமத்துவமின்மை நிகழ்கின்றது. இவ்வாறு இல்லாமல் அனைத்து மக்களும் அரசியல் பொருளாதார சமூக ரீதியாக பங்கெடுக்க சம வாய்ப்புகள் வழங்க வேண்டும்.

பொதுவாக அரச உயர் பதவிகள் வகிப்பவர்கள் பெரும்பாலும் தனி இனத்தை சார்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்களே உயர் பதவிகளுக்கு பெரும்பாலும் பரிந்துரைக்கப்படுகின்றனர். இவ்வாறு தனி இனத்திலிருந்து ஒரு பதவிக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் தம்முடைய இனத்தின் நலனில் மட்டும் கரிசனை கொண்டு செயற்பட வாய்ப்புண்டு. இதனால் ஓர் இனம் மற்ற இனத்திற்கு அடிபணிய நேரிடும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சிறுபான்மை இனங்கள் அடங்கிப் போகும் தன்மை காணப்படுவதால் இவை இன ரீதியான பிரிவுக்கு வழிவகுக்கும் போக்கை காட்டுகின்றது. இவ்வாறு இல்லாமல் உயர் பதவிகளுக்கு அனைத்து இன மக்கள் தரப்பினரிடம் இருந்தும் பதவிகளுக்கான அதிகாரிகளை தெரிவு செய்ய வேண்டும். இவ்வாறு இருக்கும் பட்சத்தில் அவர்கள் தத்தமது இனத்தின் தேவைகளை பூர்த்தி செய்யவும் தமது நலன்கள் மறுக்கப்படும் போது அவற்றிற்கு எதிராக குரல் கொடுத்து அவ்வாறான நலன்களை பூர்த்தி செய்யவும் முடியும். இவ்வாறு தட்டி கேட்கும் போது நலன்களை மறுப்பவர்கள் சர்வாதிகாரியாக மாறுவதை தடுப்பதோடு இனங்களுக்கு இடையே பிரிவினை போக்கும் ஏற்படாது, சகல இன மக்களும் தமது நலன்களை பெற்று ஒற்றுமையாக வாழ்வதற்கான சூழலை உருவாக்கிக் கொள்ளலாம்.

பொருளாதாரம் பற்றி நோக்கும்போது உள்நாட்டு வேலை வாய்ப்பாக இருந்தாலும் சரி, வேறெந்த பொருளாதார காரணியாக இருந்தாலும் சரி, அவற்றை வழங்கும் போது எல்லா இன மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் வழங்க வேண்டும். தனியார் இனத்திற்கு பெரும்பான்மையான வேலை வாய்ப்புகளை வழங்கும்போது பல இனத்தவர்களும் பயனடைய கூடிய வகையில் அவற்றை வழங்க வேண்டும். அனைத்து இனத்தினருக்கும் சமமான முறையில் இவை வழங்கப்படும் போது ஏனைய இனமும் வளர்ச்சி அடைந்து செல்லும் இனங்களுக்கு இடையே ஒற்றுமை ஏற்படும்.

சமூக காரணிகளை பார்க்கும்போது ஒரு சில இனங்கள் வாழும் சமூகங்கள் இன்னமும் அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் பின்தங்கிய பிரதேசங்களாக உள்ளன. இவற்றை அபிவிருத்தி செய்யும்போது தான் பல இன சமூகமும் வளர்ச்சி அடைகின்றது. இதனால் இனங்கள் தாமும் ஒரு வளர்ச்சி அடைந்து, ஏனைய இனங்களோடு ஒத்துப்போகும் தன்மை காணப்படும். மனித வரலாற்றை திரும்பி பார்க்கின்ற வேளையிலே ஆரம்பம் முதல் இன்று வரை மனித இனம் வளர்ச்சி அடைந்து வந்த பாதையை நோக்குமிடத்து எவ்வளவு தூரம் வாழ்க்கை ஓட்டங்களில் ஒவ்வோர் இனத்தையும் பாதித்துள்ளது என்பதை உணர முடியும்.

மனித வரலாற்றையும் வாழ்க்கையும் விளங்கிக் கொள்ள இனங்களை பற்றி அறிந்திருத்தல் அவசியமானது. இவ்வாறு பல இனங்களை பற்றி அறிந்திருந்தால் மட்டுமே இனங்களை மதித்து அவர்களோடு ஒன்றித்து வாழ்ந்து இனங்களுக்கு இடையே பலமான உறவையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த முடியும். ஒவ்வோர் இனமும் ஒன்றாக வாழ, இதற்கு அடித்தளமாக குடும்பத்தில் உள்ள உறவுகள் ஒற்றுமையாக வாழ வேண்டும். சமூக உறவுகள் மத்தியில் சாதி, சமயம் என்பன வேறுபடுகின்றன. பதவிகளும், பட்டங்களும் பிரிவினைகளை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான மாற்றங்களின் போது இனங்களுக்கு இடையே வேற்றுமை ஏற்படுகின்றது. இவ்வேற்றுமை மனப்பான்மை நீங்க வேண்டுமெனில் முதலிலே குடும்பங்களில் ஒற்றுமை நிலைப்பது அவசியம் ஆகும்.

மேற்குறிப்பிடப்பட்டு அனைத்தையும் நாம் தொகுத்து நோக்குமிடத்து இனங்களுக்கு இடையே ஐக்கியத்தை ஏற்படுத்த முதலில் மனித மனங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். இலங்கை திருநாட்டின் பிள்ளைகளாகிய நாம் அனைவருமே ஒரு தாய் மக்கள் நாம் என்றும் ஒன்றே எங்கள் குலம் என்ற எண்ணத்தோடும் எல்லோரும் உமது உறவினர்கள் என்ற சகோதரத்துவத்தோடும் நமது நாட்டின் மனித மாண்பை மதித்து, அனைவரும் மனிதநேயம் கொண்டவர்களாக வாழ்வதோடு முரண்பாடுகளை நீக்கி ஒற்றுமையாகவும் அனைவரும் சமம் என்ற மனநிலையோடும் வாழ்ந்து இனங்களுக்கு இடையே ஐக்கியத்தை ஏற்படுத்தி வாழ்வோம்.








## சிறுவர் சந்தை

புத்தளம் தெற்கு கோட்டத்துக்கு உட்பட்ட கணமூலை முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் நான்கு பாலர் பாடசாலைகள் இணைந்து ஏற்பாடு செய்த சிறுவர் சந்தை நிகழ்வு, கணமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மைதானத்தில் வியாழக்கிழமை (14) நடைபெற்றது.

எம்.யு.எம் சனூன்

## குடை அன்பளிப்பு



நானுஓயா பீலிவர் ஈஸ்ட் கிறிஸ்தவ தேவாலயத்தின் ஊடாக 2004ஆம் ஆண்டு முதல் *Hope for children* எனும் சமூக மேம்பாட்டு திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கை முழுவதும் தற்போது ஆறு நிகழ்ச்சி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நானுஓயா, தலவாக்கலை, அம்பேவல, கிழிக்குஞ்சுமலை, உரும்பிராய், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இதில் 1,200 பிள்ளைகள் அங்கம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதில் விசேட அம்சமாக நானுஓயா கிளாரண்டன் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவச குடை வழங்கும் நிகழ்வு நானுஓயா, கிளாரண்டன் கலாசார மண்டபத்தில் திங்கட்கிழமை (18) பிற்பகல் நடைபெற்றது.

செ. திவாகரன்





## உலக நோயாளர் பாதுகாப்பு

உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தினையொட்டி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு வைத்தியசாலை வளாகத்தில் திங்கட்கிழமை (18) மாலை இடம்பெற்றது.

வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர் றஜாப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, நோயாளர் பாதுகாப்பு தினம் வைத்தியசாலைகளில் அனுஷ்டிக்கப்படுவதற்கான அவசியம் தொடர்பில், வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எம்.தாசீம் விசேட சொற்பொழிவாற்றினார்.

எம்.ஏ றமீஸ்

## இயந்திரம் கையளிப்பு

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட அஸ் -ஸுஹறா பாடசாலைக்கான புதிய நவீன போட்டோ கொப்பி இயந்திரம், றஹ்மத் பௌண்டேசன் அமைப்பால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கான புதிய நவீன போட்டோ கொப்பி இயந்திரம் தேவை குறித்த பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர் மஜீதிய்யாவின் வேண்டுகோளுக்கமைவாக றஹ்மத் பௌண்டேசன் அமைப்பின் ஆயுட்கால தலைவர் முன்னாள் மாநகரப் பிரதிமேயர் றஹ்மத் மன்சூரால் வைபவரீதியாக திங்கட்கிழமை (18) காலை விசேட ஆராதனையில் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது கோட்டமட்ட kids Atlatics போட்டியில் முதலாம் இடம்பெற்ற தரம் 03 ஆண்கள்,பெண்கள், தரம் 04 ஆண்கள் பிரதம அதிதியால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

பாறுக் ஷிஹான்






## சிசுபல மூலம் அப்பியாச கொப்பிகள்

சமுர்த்தி மாணவர் சக்தி (சிசுபல) சமூக நலன்கள் திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகள் வழங்கும் நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சமுர்த்தி வங்கிச்சங்க முகாமைத்துவ பணிப்பாளரின் தலைமையில் திங்கட்கிழமை (18) இடம்பெற்றது.





## சீருடை அறிமுகம்





மருதமுனை பைத்துல் ஹெல்ப் போ ரிலீப் அமைப்பின் சீருடை அறிமுகமும், கடந்த கால சேவைகள் அறிமுகமும், பரிசளிப்பும் அமைப்பின் தலைவர் எம்.எச். ரைசூல் ஹக்கீம் தலைமையில் மருதமுனை மருதூர் கொத்தன் கலையரங்கில் ஞாயிற்றுக்கிழமை (17) நடைபெற்றது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக பல்வேறு சமூக நல வேலைத்திட்டங்கள், வீடமைப்பு, குடிநீர் வழங்கள் , மின்சார இணைப்புகள், ஏழைகளுக்கான உதவி திட்டங்கள், வலது குறைந்தோர் உதவி வேலைத்திட்டங்கள், கல்வி மேம்பாட்டுப் பணிகள், அனர்த்த கால உதவிகள் என பல்வேறு பணிகளை முன்னின்று செய்துவரும் இந்த அமைப்பின் உத்தியோகபூர்வ மேலங்கியை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெளியிட்டு வைத்தார்.

நூருல் ஹுதா உமர்


# சூரியனின் எல்-1 க்கு நகர்த்தப்பட்டது 'ஆதித்யா எல்-1'

ஆந்திர மாநிலம் ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருந்து கடந்த இரண்டாம் திகதி பிஎஸ்எல்வி சி-57 ரொக்கெட் ஆதித்யா எல் -1 விண்கலத்தை சுமந்துகொண்டு சூரியனை நோக்கி வெற்றிகரமாகப் பாய்ந்தது. பின்னர், ஆதித்யா எல்-1 விண்கலம் புவி சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.

இந்த விண்கலம் அடுத்தாண்டு ஜனவரி மாதம் நான்காம் திகதி அதன் இலக்கை அடையும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஆதித்யா எல்-1 விண்கலத்தின் புவி சுற்று வட்டப்பாதை உயரம் ஐந்தாவது முறையாக அதிகரிக்கப்பட்டது என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

அதன்படி, விண்கலம் சூரியனின் எல்-1 புள்ளியை நோக்கி வெற்றிகரமாக நகர்ந்துள்ளது என இஸ்ரோ தெரிவித்துள்ளது.




கனடா

### காலிஸ்தான் பயங்கரவாதி கொலை விவகாரம்

## இந்திய அதிகாரியை வெளியேற்றியது கனடா




காலிஸ்தான் பயங்கரவாதி கொலையான விவகாரத்தில் இந்திய தூதரக அதிகாரி ஒருவரை கனடா அரசு வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி மாநிலம் வேண்டும் என காலிஸ்தான் பயங்கரவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். இதனை வலியுறுத்தி கனடாவில் உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்தியாவுக்கு எதிரான செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில், கனடாவில் காலிஸ்தான் டைகர் படைப்பிரிவின் தலைவரும், தீவிரவாதியுமான ஹர்தீப் சிங் நிஜார் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் கனடாவில் உள்ள இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவில் உள்ள துணைத் தூதர் அபூர்வா வஸ்த்தவா ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என அவர்களின் புகைப்படங்களுடன் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் போஸ்டர் ஒட்டினர்.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் பேசிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, "இந்திய அரசாங்க முகவர்களுக்கும் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கொலைக்கும் தொடர்பு இருப்பதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உள்ளன" என்று கூறினார்.

## விவாகரத்தில் இந்தியாவுக்கு இறுதி



உலகிலேயே அதிக விவாகரத்தை இடம்பெறும் நாடுகளின் பட்டியல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இதில் இந்தியா மிகக் குறைந்த சதவீதத்துடன் கடைசி இடத்தை பிடித்திருப்பது இந்திய நெட்டிசன்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் விவாகரத்து சதவீதம் 1% ஆக உள்ளது. இரண்டாவது இடத்தில் வியட்நாம் உள்ளது. இருப்பினும் இங்கு 100-இல் 7 திருமணங்கள் விவாகரத்தில் முடிவதாக தகவல் தெரிவிக்கின்றன.

உலகிலேயே அதிக விவகாரத்தை பெறும் நாடாக ஐரோப்பய நாடான போர்த்துக்கல் மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கு 94 சதவீத திருமணங்கள் விவாகரத்தில் முடிவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மாண்டெனெக்ரோ

## "உங்களில் யார் மிக மிக சோம்பேறி?"

ஐரோப்பாவில் இருக்கும் குட்டி நாடு மாண்டெனெக்ரோ. இது சின்ன கிராமங்களையும் அழகிய கடற்கரைகளையும் கொண்டது. இந்த நாட்டின் மொத்த மக்கள்தொகையே ஆறு இலட்சம் தான்.

இந்த நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் யார் சோம்பேறி என்ற பட்டத்திற்காக வித்தியாசமான ஒரு போட்டி நடைபெறும். இந்தப் போட்டியில் பங்கேற்போர் 24 மணிநேரமும் கட்டிலில் படுத்தபடியே இருக்க வேண்டும். அவர்கள் எழுந்து அமரவோ அல்லது நடக்கவோ அனுமதி இல்லை. ஒருவர் எத்தனை நாள்கள் அப்படியே படுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே போட்டியின் மையக்கரு. அதேநேரம் ஒவ்வோர் எட்டு மணி நேரத்திற்கும் ஒருமுறை 10 நிமிடங்கள் கழிப்பறைக்குச் செல்ல மட்டும் போட்டியாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.



அதிக நேரம் படுத்துக் கொண்டே இருப்பவர் தான் போட்டியில் வென்றவராக அறிவிக்கப்படுவார். மேலும் இந்தப் போட்டியில் வெல்வோருக்கு 1,070 டொலர் பரிசு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் படுத்துத் தூங்க அனுமதி உண்டு. படுத்துக் கொண்டே உணவு மற்றும் பானங்களை அருந்தலாம். மேலும், அலைபேசியை பயன்படுத்தவும் அனுமதி உண்டு.

பாகிஸ்தான்

## மிஸ் யூனிவர்ஸ் போட்டியில் பாகிஸ்தானிய பெண்



பெண்களுக்கான சர்வதேச அழகி போட்டிகளில் பிரபலமானனது 'மிஸ் யூனிவர்ஸ்'. இது அமெரிக்கா மற்றும் தாய்லாந்து ஆகிய இரு நாடுகளையும் தளமாக கொண்ட மிஸ் யூனிவர்ஸ் நிறுவனத்தால் வருடாந்தம் நடத்தப்படுகிறது. மாலத்தீவில் 'மிஸ் யூனிவர்ஸ் பாகிஸ்தான்' போட்டி நடைபெற்றது. அதில் 4 போட்டியாளர்களை பின்னுக்கு தள்ளி, எரிகா ரொபின் (24) எனும் பெண் முதலிடம் பிடித்துள்ளார். இதனையடுத்து இவ்வருடம் நடைபெறவுள்ள 72ஆவது 'குளோபல் மிஸ் யூனிவர்ஸ்' அழகி போட்டியில், முதல்முறையாக, பாகிஸ்தான் நாட்டின் சார்பாக இவர் கலந்து கொள்ளவிருக்கிறார்.

தாய்வான்

## தாய்வானை அச்சுறுத்தும் சீனா

தாய்வானை தங்களது நாட்டின் ஒரு பகுதி என்று சீனா, நீண்டகாலமாக சொந்தம் கொண்டாடி வருகிறது. இதனை ஏற்க மறுத்து தாய்வான் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்நிலையில் சில மாதங்களுக்கு முன்பு தாய்வானை சுற்றியுள்ள கடற்பகுதியில் சீனா அத்துமீறி போர் பயிற்சிகளை மேற்கொண்டதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 103 போர் விமானங்களை கொண்டு போர் பயிற்சியை தாய்வானின் வான் பகுதியில் சீனா மேற்கொண்டுள்ளது. மேலும் தாய்வானை சுற்றியுள்ள கடற்பகுதியில் 7 போர்கப்பல்களை கொண்டு பயிற்சி ஒட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

# இந்தியக் குழாமில் மீண்டும் அஷ்வின்




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இந்திய குழாமில் இரவிச்சந்திரன் அஷ்வின், வொஷிங்டன் சுந்தர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் அணித்தலைவர் றோஹித் ஷர்மா, விராட் கோலி, ஹர்டிக் பாண்டியா, குல்தீப் யாதவ் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. ருத்துராஜ் கைகவாட், திலக் வர்மா ஆகியோர் குழாமில் இடம்பெற்றுள்ளதுடன் இப்போட்டிகளில் லோகேஷ் ராகுல் அணித்தலைவராக பெயரிடப்பட்டுள்ளார்.

இந்நிலையில், மூன்றாவது போட்டிக்கு ஷர்மா, கோலி, பாண்டியா, குல்தீப் ஆகியோர் அணிக்குத் திரும்புகின்ற நிலையில் கைகவாட், திலக், பிரசீத் கிருஷ்ணா ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: லோகேஷ் ராகுல் (அணித்தலைவர், விக்கெட் காப்பாளர்), ஷுப்மன் கில், ருத்துராஜ் கைகவாட் (முதலிரண்டு போட்டிகளுக்கு மட்டும்), ஷ்ரேயாஸ் ஐயர், இஷன் கிஷன் (விக்கெட் காப்பாளர்), சூரியகுமார் யாதவ், திலக் வர்மா (முதலிரண்டு போட்டிகளுக்கு மட்டும்), இரவீந்திர ஜடேஜா (உப அணித்தலைவர்), ஷர்துல் தாக்கூர், இரவிச்சந்திரன் அஷ்வின், வொஷிங்டன் சுந்தர், ஜஸ்பிரிட் பும்ரா, மொஹமட் சிராஜ், மொஹமட் ஷமி, பிரசீத் கிருஷ்ணா



### கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில்

## 15 பிரிவுகளில் பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலயம் தெரிவு

**அஸ்ஹர் இப்றாஹிம்**

அக்கரைப்பற்று வலய பாடசாலைகளுக்கிடையிலான சுவட்டு, மைதான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலயம் அதித திறமைகளை வெளிக்காட்டி 15 பிரிவுகளில் வெற்றி பெற்று கிழக்கு மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளது.

வலய மட்டத்தில் வெற்றியீட்டி மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கான வெற்றிச் சான்றிதழ்களை வழங்கி சீருடை அணிவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.எல்.எம். பாயிஸ் தலைமையில் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

### வட மாகாண விளையாட்டு விழாவில் 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான

## 100 மீற்றர் ஓட்டத்தில் முதலிடம் பெற்ற குறூஸ் பிறின்ரா குறூஸ்

**அஸ்ஹர் இப்றாஹிம்**



வட மாகாண விளையாட்டுப் போட்டியில் 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டம்ப் போட்டியில் மன்னார், பறப்பாங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த டனிஸ் நிசாந்தன் குரூஸ் பிறின்ரா குரூஸ் முதலாமிடத்தைப் பெற்றார்.

இப்போட்டித் தூரத்தை 14.60 செக்கன்களில் குறூஸ் பிறின்ரா குறூஸ் கடந்திருந்தார்.

## யுனைட்டெட் செல்லும் நர்பி?



ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான சேர்ஜே நர்பியை 52 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்குச் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் முயல்வதாகக் கூறப்படுகிறது.

மியூனிச்சுடன் இன்னும் மூன்றாண்டுகள் ஒப்பந்தத்தை 28 வயதான நர்பி கொண்டிருப்பதுடன் 159 போட்டிகளில் 60 கோல்களை அவ்வணிக்காகப் பெற்றுள்ளார்.

## ஆர்சனலிலிருந்து விலகும் கோல் காப்பாளர்?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான ஆர்சனலின் கோல் காப்பாளரான ஆரோன் றம்ஸ்டேலின் மீது இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சி, ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் ஆகியன கண் வைத்துள்ளன.

ஆர்சனலின் முதன்மை கோல் காப்பாளராகக் காணப்பட்ட 25 வயதான றம்ஸ்டேல், அவ்வணியின் இறுதி லீக் போட்டியில் மற்றைய கோல் காப்பாளர் டேவிட் றயாவால் பிரதியிடப்பட்டதைத் தொடர்ந்தே இத்தகவல் வெளியாகியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 20 செப்டெம்பர் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.